Series ΨYZXW/C

Set-4

Q.P. Code **10**

Roll No. [ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

Candidates must write the Q.P. Code on the title page of the answer-book.

# தமிழ்
# TAMIL

*கால அளவு : **3** மணி* | *மொ. மதிப்பெண்கள் : **80***

*Time allowed : **3** hours* | *Maximum Marks : **80***

- இந்த வினாத்தாளில் அச்சிடப்பெற்ற **23** பக்கங்கள் உள்ளதைச் சரிபார்க்கவும்.
- வினாத்தாளின் வலதுபக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறி எண்ணை (Code No.) விடைத்தாளின் தலைப்புப் பக்கத்தில் எழுதவும்.
- இந்த வினாத்தாளில் **15** வினாக்கள் உள்ளனவா எனச் சரிபார்க்கவும்.
- **எழுதத் தொடங்குவதற்கு முன் விடைத்தாளில் வினாவின் வரிசை எண்ணைக் குறிப்பிடவும்.**
- வினாத்தாளைப் படிப்பதற்கு **15** நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வினாத்தாள் 10.15 க்குக் கொடுக்கப்படும். 10.15 இல் இருந்து 10.30 வரை வினாத்தாளை மட்டும் படிக்க வேண்டும். இந்த நேரத்தில் விடைத்தாளில் எந்தப் பதிலையும் எழுதக்கூடாது.

- Please check that this question paper contains **23** printed pages.
- Q.P. Code given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **15** questions.
- **Please write down the serial number of the question in the answer-book before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

## *General Instructions :*

## பொதுவான வழிமுறைகள் :

1. *The question paper contains **four** sections.*
   இவ்வினாத்தாள் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.
2. *Section **A** – Contains **2** questions.*
   பகுதி அ - **2** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. *Section **B** – Contains **4** questions.*
   பகுதி ஆ - **4** வினாக்களைக் கொண்டுள்ளது.
4. *Section **C** – Contains **3** questions.*
   பகுதி இ - **3** வினாக்களைக் கொண்டுள்ளது.
5. *Section **D** – Contains **6** questions.*
   பகுதி ஈ - **6** வினாக்களைக் கொண்டுள்ளது.
6. *Attempt as per specific instructions for each question.*
   வினாக்களின் தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

### பகுதி - அ

**1.** (அ) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப் பட்ட பலவுள் தெரிவு செய்வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

மரங்கள் நம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரண் எனக் கூறலாம். மரங்கள் தான் மண் வளத்தைப் பேணிக் காக்கின்றன. மரங்கள் பகலில் உயிர்க்காற்றை நமக்குத்தருகின்றன. புவியின் வெப்பத்தைத் தணிக்க உதவுகின்றன. ஆனால் மனிதன் சுயநலத்திற்காக மரங்களை வெட்டி அதிலிருந்து காகிதம், இரப்பர், கோந்து, மேசை, நாற்காலி போன்ற அழகிய மரப்பொருட்களை செய்து விற்கின்றான். இதனால்

மனிதன் எதிர்கொள்ளப்போகும் துயரங்கள் ஏராளம். இந்தியாவில் 60 சதவீதம் மரம் இருக்க வேண்டும்.

அசோக மன்னன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மரத்தின் அருமையை உணர்ந்து சாலையின் இரு மருங்கிலும் எண்ணற்ற மரங்களை நட்டார். எனவே நாமும் மரம் வளர்ப்போம். மரங்கள் பல மருத்துவ குணம் வாய்ந்தவை. மரங்கள் மனிதருக்கு மட்டும் அல்லாது எண்ணற்ற உயிர்களுக்கும் அரணாக உள்ளன. அரசாங்கமே ஒருவர் பத்து மரம் வளர்க்க வேண்டும் எனச் சொல்கிறது. அனைவரும் மரம் வளர்ப்போம் ! இயற்கை வளம் காப்போம் !

**வினாக்கள் :**

(i) மரங்களில் இருந்து நமக்குக் கிடைக்கும் பொருட்கள் என்னென்ன ?

(a) காகிதம், மேசை

(b) காகிதம், சுண்ணாம்பு

(c) மேசை, கண்ணாடி

(d) இரப்பர், தகரம்

(ii) அசோக மன்னன் செய்த செயல் யாது ?

(a) சாலையின் இருமருங்கிலும் மரம் நட்டார்

(b) ஊர் தோறும் சுற்றுலா சென்றார்

(c) அன்னதானம் செய்தார்

(d) மலை, காடுகளில் மரங்கள் நட்டார்

(iii) இந்தியாவில் எத்தனை சதவீதம் மரங்கள் இருக்க வேண்டும் ?

(a) 30 சதவீதம்

(b) நாற்பது சதவீதம்

(c) 50 சதவீதம்

(d) அறுபது சதவீதம்

(iv) மரங்கள் மனிதருக்கு எக்காற்றைத் தருகிறது ?

(a) கரியமிலவாயு

(b) உயிர்க்காற்று

(c) நைட்ரஜன்வாயு

(d) மீத்தேன்வாயு

(v) மரங்கள் எதனைப் பேணிப் பாதுகாக்கிறன ?

(a) காட்டுவளம்

(b) தொழில்வளம்

(c) மண்வளம்

(d) செல்வவளம்

**(அல்லது)**

(ஆ) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

விடுதலைப் போர் தமிழ்நாட்டில்தான் முதன் முதலில் தோன்றியது. வீரபாண்டிய கட்டபொம்மன் முதன்முதலில் வெள்ளையர் ஆட்சியின் கொடுமையை எதிர்த்து வீர முழக்கமிட்டார். அதற்குப் பரிசாக

அவருக்குத் தூக்குக் கயிறு கிடைத்தது. 1806-ஆம் ஆண்டில் வேலூரில் இராணுவப் புரட்சி நடந்தது. அதுவே சுதந்திரப் போருக்கு வித்திட்டது.

திலகரின் தீவிரப் போக்கை ஏற்றார் ‘கப்பலோட்டியதமிழர்’ வ.உ. சிதம்பரனார். அவர் வெள்ளையருக்கு எதிராகத் தூத்துக்குடியில் கப்பல் ஓட்டினார். அதன் விளைவாக ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு ஆட்பட்டு சிறைபட்டார்; கல்லுடைத்தார்; கசையடிப் பெற்றார். செக்கிழுத்த செம்மலானார். தென்னாட்டுத் திலகர் எனப் போற்றப்பெற்றார். சுப்பிரமணிய சிவா என்னும் துறவியும் ஊர் ஊராக நடந்து சென்று உணர்ச்சி மிக்கப் பாடல்களால் உறங்கிக் கிடந்த மக்களை விழித்தெழச் செய்தார். எழுச்சி கொள்ளச் செய்தார். இவர்களின் முயற்சியால் தமிழ்நாட்டு மக்களிடம் குடி கொண்டிருந்த அடிமை எண்ணம் விலகியது. அனைவரும் திரண்டெழுந்தனர். ஆனந்த சுதந்திரம் அடைய அரும் பாடுபட்டனர்.

**வினாக்கள் :**

(i) விடுதலைப் போர் முதன்முதலில் எங்கு தோன்றியது ?

(a) தமிழ்நாடு

(b) கேரளா

(c) பஞ்சாப்

(d) வங்கதேசம்

(ii) வெள்ளையர் ஆட்சியை முதன்முதலில் எதிர்த்தவர் யார் ?

(a) பாரதியார்

(b) வ.உ.சி.

(c) வீரபாண்டிய கட்டபொம்மன்

(d) மருது சகோதரர்கள்

(iii) வ.உ. சிதம்பரனார் சுதந்திரப் போராட்டத்திற்காக செய்தது என்ன ?

(a) வெள்ளையருக்கு எதிராக முழக்கமிட்டார்

(b) வெள்ளையருக்கு எதிராக கருத்துக் கூறினார்

(c) வெள்ளையருக்கு எதிராகத் தூக்குக்குடியில் கப்பல் ஓட்டினார்

(d) வெள்ளையருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்

(iv) சுப்பிரமணிய சிவா என்னும் துறவி என்ன செய்தார் ?

(a) பாடல்களால் உறங்கிக் கிடந்த மக்களை விழித்தெழச் செய்தார்

(b) திரையிசைப் பாடல்களை மக்களிடம் பாடினார்

(c) வெள்ளையர்களை புகழ்ந்து பாடி பரிசுகள் பெற்றார்

(d) ஊர் ஊராகச் சென்று பக்திப் பாடல்கள் பாடினார்

(v) இராணுவப் புரட்சி எவ்வாண்டு நடைபெற்றது ?

(a) 1808

(b) 1800

(c) 1802

(d) 1806

**2.** (அ) கீழ்வரும் பகுதியைப் படித்துணர்ந்து கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்றவிடை எழுதுக : *5×1=5*

நல்லவராக இருந்தால் மட்டும் போதாது. வல்லவராகவும் இருக்க வேண்டும். இந்த உலகில் வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் நல்லவராகவும் வல்லவராகவும் இருக்க வேண்டும். மக்கள் அனைவரும் நல்ல உடல் நலமுடனும் வாழ வேண்டும் எனவேதான் திருமந்திரத்தில் திருமூலர் ‘உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்’ என்றார். உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவு உடலைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். ‘பசித்துப்புசி’ என்பதுதான் நம்நாட்டில் வழங்கும் பழமொழி. எனவே, நாம் நமது சூழ்நிலைக்கு ஏற்ற சத்தான உணவை அளவோடு உண்ண வேண்டும். ஆனால் இன்று மக்கள் துரித உணவையே விரும்பி உண்கின்றனர். அவற்றால் ஏற்படும் நோய்களைப் பற்றி சிந்திப்பதே இல்லை. அவை பெருமளவு கொழுப்புச் சத்தையே கொண்டவை. அவை குளிர் நாடுகளான மேலை நாடுகளுக்குப் பொருந்துமேயன்றி

வெப்பம் மிகுந்த நமது நாட்டுக்கு அவை பொருந்தாது, எனவே நம் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற சத்தான உணவை உண்ண வேண்டும். வளமான வாழ்வோடு நாட்டுக்கு நன்மைகள் பல செய்யும் குடிமக்களாய் வாழவேண்டும்.

**வினாக்கள் :**

(i) ‘உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்’ என்று உரைத்தவர் யார் ?

(a) திருநாவுக்கரசர்

(b) விவேகானந்தர்

(c) திருமூலர்

(d) கம்பர்

(ii) மக்கள் எவ்வாறு இருக்கவேண்டும் ?

(a) நல்லவராக இருக்கவேண்டும்

(b) வல்லவராக இருக்க வேண்டும்

(c) நல்லவராகவும் வல்லவராகவும் இருக்க வேண்டும்

(d) செல்வமுடையவர்களாக இருக்க வேண்டும்

(iii) இப்பத்தியில் இடம் பெற்றுள்ள பழமொழி எது ?

(a) கசக்கிக் கட்டு

(b) குளித்துப்புசி

(c) அளவோடு புசி

(d) பசித்துப்புசி

(iv) உடல் வளர்ச்சிக்குத் தேவையானது எது ?

(a) உணவு

(b) இறைச்சி

(c) உடை

(d) அன்பு

(v) துரித உணவுகள் பெரும்பாலும் ________ சத்துடையவை.

(a) புரதச்

(b) மாவுச்

(c) நார்ச்

(d) கொழுப்புச்

**(அல்லது)**

(ஆ) கீழ்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

ஒருநாள் இங்கிலாந்து நாட்டில், இரவீந்திரநாத் தாகூர் ஓர் ஏழை மனிதன் தெருவோரமாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவன் அணிந்திருந்த காலணிகள் கிழிந்து, விரல்கள் வெளியில் தெரிந்து கொண்டிருந்தன. அந்தக் காலக்கட்டத்தில் பிச்சை எடுப்பது தடை செய்யப்பட்டிருந்தது. அதனால் அம்மனிதன் எதுவும் பேசாமல் தாகூரையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். தாகூர் அம்மனிதன் மேல் பரிதாபப்பட்டு ஒரு தங்க நாணயத்தை அவனிடம் கொடுத்து விட்டு நகர்ந்தார். அவனோ தாகூர்

தவறுதலாகத்தான் தங்க நாணயத்தைக் கொடுத்துவிட்டு சென்றார் என எண்ணிக் கொண்டு, தாகூரிடம் நெருங்கி வந்து அவர் கொடுத்துச் சென்ற தங்க நாணயத்தை மீண்டும் அவரிடமே கொடுத்துவிட்டு சென்றான். இதனைச்சற்றும் எதிர்பார்க்காத தாகூர் அம்மனிதனின் நேர்மையைக் கண்டு வியந்து போனார்.

**வினாக்கள் :**

(i) இரவீந்திரநாத் தாகூர் ஏழை மனிதனை எந்நாட்டில் கண்டார் ?

(a) போலந்து

(b) இங்கிலாந்து

(c) பின்லாந்து

(d) ஹாலந்து

(ii) நாகூர் அவர்கள் யாரைத் தெருவோரமாகக் கண்டார் ?

(a) ஒரு விதவைப் பெண்ணை

(b) ஓர் எளிய மனிதனை

(c) ஓர் ஏழைப் பெண்ணை

(d) ஓர் ஏழை மனிதனை

(iii) இங்கிலாந்தில் எது தடை செய்யப்பட்டிருந்தது ?

(a) தர்மம் போடுவது

(b) பிச்சை எடுப்பது

(c) பணம் கொடுப்பது

(d) சோறு போடுவது

(iv) தாகூர் அம்மனிதனுக்கு பரிதாபப்பட்டு என்ன கொடுத்தார் ?

(a) ஒரு தங்கபொற்கிளியை

(b) இரு தங்க பொற்காசை

(c) ஒரு வெள்ளி நாணயத்தை

(d) ஒரு தங்க நாணயத்தை

(v) ஏழை மனிதனின் எச்செயலினைக்கண்டு தாகூர் வியந்தார் ?

(a) வைராக்கியத்தைக்கண்டு

(b) நிதானத்தைக் கண்டு

(c) பொறுமையைக் கண்டு

(d) நேர்மையைக் கண்டு

## பகுதி ஆ

## (இலக்கணப் பகுதி)

**3.** சான்று தருக : (எவையேனும் நான்கு மட்டும்) *4×1=4*

(i) செய்யுளிசை அளபெடை

(a) உறாஅர்க்கு

(b) வரனசைஇ

(c) இலங்ங்கு

(d) எடுப்பதூஉம்

(ii) பண்புத்தொகை

(a) செங்காந்தள்

(b) பாடம் படித்தான்

(c) மதிமுகம்

(d) தேர்ப்பாகன்

(iii) தன்மை வினை

(a) வந்தேன்

(b) சென்றீர்கள்

(c) அவர்கள்

(d) பேசினார்கள்

(iv) மருதத்திணை

(a) வயலும் வயல் சார்ந்த இடமும்

(b) கடலும் கடல் சார்ந்த இடமும்

(c) காடும் காடு சார்ந்த இடமும்

(d) மலையும் மலை சார்ந்த இடமும்

(v) அடுக்குத்தொடர்

(a) மாதவம்

(b) எழுந்து வா

(c) பாடி முடித்தான்

(d) ஓடுஓடு

**4.** கூறியவாறு செய்க : (எவையேனும் நான்கினுக்கு மட்டும்) *4×1=4*

(i) உறுதல் (முதனிலை திரிந்த தொழிற் பெயராக மாற்றுக.

(a) உறு

(b) ஊறு

(c) ஊறுதல்

(d) பெறு

(ii) ஆந்தை கத்தியது (வழு நீக்குக)

(a) ஆந்தை அலறியது

(b) ஆந்தை கூவியது

(c) ஆந்தை கதறியது

(d) ஆந்தை சப்தமிட்டது

(iii) நெய்தல் நிலம் (சிறு பொழுதை எழுதுக)

(a) வைகறை

(b) மாலை

(c) எற்பாடு

(d) யாமம்

(iv) முறுக்கு மீசை வந்தார் (தொகையை கூறு)

(a) வினைத்தொகை

(b) உவமைத்தொகை

(c) உம்மைத்தொகை

(d) அன்மொழித்தொகை

(v) இராமன் - வினைமுற்றுத்தொடராக்குக

(a) உண்டான் இராமன்

(b) உண்டான்

(c) உண்ட இராமன்

(d) உண்ணும் இராமன்

**5.** இலக்கணக்குறிப்புத் தருக : (எவையேனும் நான்கனுக்கு மட்டும்) *4×1=4*

(i) பலகை

(a) பொதுமொழி (b) தனிமொழி

(c) தொடர்மொழி (d) கலவைமொழி

(ii) நடவாமை

(a) தொழிற்பெயர்

(b) முதனிலைத் தொழிற்பெயர்

(c) எதிர்மறைத் தொழிற்பெயர்

(d) இரண்டாம்நிலை தொழிற்பெயர்

(iii) வீசுதென்றல்

(a) வினைத்தொகை

(b) வேற்றுமைத்தொகை

(c) பண்புத் தொகை

(d) உம்மைத்தொகை

(iv) வியத்தல்

(a) பண்புப்பெயர் (b) இடப்பெயர்

(c) காலப்பெயர் (d) தொழிற்பெயர்

(v) ஊழ்ஊழ்

(a) அடுக்குத்தொடர்

(b) இரட்டைக்கிளவி

(c) பொதுமொழி

(d) தனிமொழி

**6.** நிரப்புக : *4×1=4*

(i) இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ____________ எனப்படும்.

(a) வழு

(b) வழுவமைதி

(c) வழா

(d) வழுவழா

(ii) தொகா நிலைத்தொடர் ____________ வகைப்படும்.

(a) ஆறு

(b) ஏழு

(c) எட்டு

(d) ஒன்பது

(iii) நிரல்நிறைப் பொருள்கோள் ___________ வகைப்படும்.

(a) நான்கு

(b) மூன்று

(c) இரண்டு

(d) எட்டு

(iv) ஆசிரியர் மாணவரிடம் வினவும் வினா ________ .

(a) அறியாவினா

(b) அறிவினா

(c) ஐயவினா

(d) கொடைவினா

## பகுதி - இ (இலக்கியம்)

**7.** பின்வரும் பாடலைப் படித்துக் கொடுக்கப் பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக : *5×1=5*

"விசும்பில் ஊழி ஊழ்ஊழ் செல்லக்
கருவளர் வானத்து இசையில் தோன்றி
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்
உந்து வளி கிளர்ந்த ஊழிஊழ் ஊழியும்"

(i) பரிபாடல் ________ நூல்களுள் ஒன்றாகும்.

(a) பத்துப்பாட்டு

(b) எட்டுத்தொகை

(c) பதினெண்கீழ்க்கணக்கு

(d) குறுந்தொகை

(ii) பரிபாடலின் ஆசிரியர்

(a) பிசிராந்தையார்

(b) ஆண்டாள்

(c) கீரந்தையார்

(d) பெரியாழ்வார்

(iii) __________ பரிபாடல் என்னும் புகழுடையது.

(a) மங்கா

(b) ஓங்கு

(c) விரி

(d) அழியா

(iv) சங்க நூல்களுள் __________ பாடப்பட்ட நூல்பரிபாடல்.

(a) பண்ணொடு

(b) விண்ணொடு

(c) சந்தமுடன்

(d) நயமுடன்

(v) ‘ஊழி’ - இச்சொல்லின் பொருள் ________ .

(a) முறை

(b) யுகம்

(c) சிறப்பு

(d) மகிழ்ச்சி

**8.** பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக : *5×1=5*

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து. அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது. திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்பட்டது. பின்னர் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், பாடல், ஆடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இருக்கிறது.

**வினாக்கள் :**

(i) யாரால் நிகழ்த்தப்படுவது தெருக்கூத்து ?

(a) நகர்புற மக்களால்

(b) நாட்டுப்புற மக்களால்

(c) வெளிநாட்டு மக்களால்

(d) சீனமக்களால்

(ii) தெருக்கூத்து எதனை அடிப்படையாகக் கொண்டது ?

(a) இடத்தை

(b) செயலை

(c) பண்பை

(d) செய்கையை

(iii) தெருக்கூத்து எதனை ஆடுகளமாக்கி ஆடுவர் ?

(a) மேடையை

(b) பொதுவெளியை

(c) அரங்கத்தை

(d) திறந்தவெளியை

(iv) தெருக்கூத்து __________ சார்ந்த கலையாக ஆக்கப்பட்டது.

(a) கோவில்

(b) நாடகம்

(c) திரைப்படம்

(d) கழைக்கூத்து

(v) தெருக்கூத்து எந்த தெய்வத்தின் வழிபாட்டு பகுதியாக இருக்கிறது ?

(a) முருகன்

(b) சிவன்

(c) திரௌபதி

(d) பெருமாள்

**9.** பின்வரும் குறட்பாக்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக : *4×1=4*

(i) குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும் _________ .

(a) கூட்டம்

(b) பூமி

(c) சூரியன்

(d) உலகு

(ii) கருவியும் காலமும் ________ செய்யும் அருவினையும் மாண்ட தமைச்சு.

(a) செய்கையும்

(b) மாயையும்

(c) பகைமையும்

(d) பொய்ம்மையும்

(iii) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ______________ உயிரினும் ஓம்பப் படும்.

(a) ஒழுக்கம்

(b) விழுப்பம்

(c) ஒழுக்கமே

(d) விழுப்பமே

(iv) அருமை உடைத்தென் றசாவாமைவேண்டும் பெருமை __________ தரும்.

(a) தளர்ச்சி

(b) உயர்ச்சி

(c) முயற்சி

(d) புகழ்

## பகுதி ஈ

**10.** பின்வரும் செய்யுள் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக. *2×3=6*

(i) தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பெருஞ்சித்தனார் சுட்டுவன யாவை ?

(ii) கூத்தரைக் கூத்தர் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?

(iii) மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்கு சிறப்பு செய்தது ஏன் ? விளக்குக.

(iv) முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை குமரகுருபரர் எவ்வாறு விளக்குகிறார் ?

**11.** எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி : *3×4=12*

(i) தெருக்கூத்து - விளக்குக.

(ii) மொழிபெயர்ப்புக் கல்வி பற்றியும் அதன் பயன்கள் பற்றியும் எழுதுக.

(iii) இல்லத்திற்கு வரும் உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(iv) இலக்கியங்களில் காற்று எப்படி நீங்கா இடத்தைப் பிடித்திருக்கிறது ?

(v) தாவரங்களின் இலை, கொழுந்து வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.


**12.** பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக. *1×7=7*

(i) புயலிலே ஒரு தோணி

(ii) விண்ணைத்தாண்டிய நம்பிககை

(iii) புதிய நம்பிககை

**13.** பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. *3*



பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா. $1\frac{1}{2}+1\frac{1}{2}=3$

பின்வருவனவற்றை தொடரில் அமைத்து எழுதுக

(i) கைகழுவி விட்டான்

(ii) கை கொடுத்தான்

14. பின்வரும் கடிதங்களுள் ஏதேனும் ஒன்று குறித்து கடிதம் வரைக. *1×6=6*

(i) உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்றத் தொடக்க விழா பற்றி நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(ii) உம் பகுதியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தர வேண்டி மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக.

(இரு கடிதங்களிலும் உன் முகவரி க.வாசுகி / க.வாசு, எண் : 16, பெருமாள் வீதி, சென்னை-30 எனக் கொள்க.

15. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. *1×6=6*

(i) முன்னுரை - அறிவியலால் மாசு படுதல் - மரம் நடுவதன் இன்றியமையாமை - ஆய்வு மையம் - முடிவுரை.

(ii) முன்னுரை - இந்தியாவை வளமாக மாற்றுவதில் மகளிர் பங்கு - பெண்களின் வளர்ச்சியை கொண்டாடுதல் - பலதுறைகளில் பெண்கள் - முடிவுரை.

(iii) முன்னுரை - தொண்மை - உயர்மொழி தனிமொழி - தமிழ் செம்மொழி - தமிழின் பொதுப்பண்பு - அரசின்கடமை - முடிவுரை.